ஞாயிறுதோறும்
தினமணியுடன்...
தினமணி கொண்டாட்டம்

தினமணி
வியாழக்கிழமை, 22 மே 2025

ஞாயிறுதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

சர்வதேச புக்கர் பரிசு வென்ற கன்னட பெண் எழுத்தாளர்!

புக்கர் பரிசு வென்ற பானு முஷ்தாக். உடன் மொழிபெயர்ப்பாளர் தீபா பஸ்தி (வலது).

லண்டன்/பெங்களூரு, மே 21: கன்னட பெண் எழுத்தாளர் பானு முஷ்தாக், சர்வதேச புக்கர் பரிசை வென்றுள்ளார். அவருக்கு கர்நாடக முதல்வர் சித்தராமையா உள்ளிட்டோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

கர்நாடக மாநிலம், ஹாசனைச் சேர்ந்த பானு முஷ்தாக், 'லங்கேஷ் பத்திரிகா' என்ற வார இதழில் 9 ஆண்டுகள் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர்.

அப்போது பல சிறுகதைகளை எழுதி புகழ்பெற்றிருந்தார். அவரது சிறுகதைகளை 'ஹார்ட் லேம்ப்' (இதய விளக்கு) என்ற பெயரில் எழுத்தாளர் தீபாபஸ்தி, கன்னடத்தில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்தார். இந்த சிறுகதை தொகுப்பு நூலுக்கு இலக்கிய உலகின் மிக உயர்ந்த சர்வதேச புக்கர் பரிசு கிடைத்துள்ளது. இது, விருதுக் கோப்பையுடன் 50,000 பவுண்ட் பரிசுத் தொகையைக் கொண்டதாகும். லண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மொழி பெயர்ப்பாளர் தீபாபஸ்தியுடன் எழுத்தாளர் பானு முஷ்தாக் பரிசைப் பெற்றார்.

புக்கர் பரிசு பெற்ற முதல் கன்னட நூல் என்ற பெருமை இந்த நூலுக்கு கிடைத்துள்ளது. அத்துடன், புக்கர் பரிசு பெற்ற முதல் கன்னட எழுத்தாளர் என்ற பெருமையை பானு முஷ்தாக் பெற்றுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் சித்தராமையா தனது எக்ஸ் பக்கத்தில் கூறியதாவது: 'இலக்கியத்துக்கான சர்வதேச புக்கர் பரிசைப் பெற்றுள்ள பானு முஷ்தாக்குக்கு எனது வாழ்த்துகள்; அவர், கன்னடக் கொடியை சர்வதேச அளவில் உயர்த்தியுள்ளார்.

கன்னடம், கன்னடர்கள், கர்நாடகத்தைக் கொண்டாடும் நேரம் இது. இந்த நிலத்தின் இயல்புகளான நல்லிணக்கம், மதச்சார்பின்மை, சகோதரத்துவத்தை தனது எழுத்துகளில் பானு முஷ்தாக் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் நிறைய எழுதி, கன்னட மொழியின் பெருமையை உலக அரங்கில் கொண்டுசெல்ல வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன். எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் தீபாபஸ்தியையும் பாராட்டுகிறேன் என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய தொழில் துறை அமைச்சர் எச்.டி.குமாரசாமி, துணை முதல்வர் டி.கே.சிவகுமார், பாஜக மாநிலத் தலைவர் விஜயேந்திரா, எழுத்தாளர் சுதாமூர்த்தி உள்பட ஏராளமானோர் பானு முஷ்தாக்கிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

காவல் துறையில் 115 பேருக்கு கருணை அடிப்படையில் பணி

பணிக்காலத்தில் காலமான காவலர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் தகவல் பதிவு உதவியாளர், காவல் நிலைய வரவேற்பாளர் பணியிடங்களுக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை பணி நியமன ஆணைகளை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் தலைமைச் செயலர் நா.முருகானந்தம், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உள்ளிட்டோர்.

சென்னை, மே 21: காவல் துறையில் 115 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன உத்தரவுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இதற்கான நிகழ்வு தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இது குறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

காவல் துறையில் பணிக்காலத்தில் காலமான காவலர்களின் வாரிசுதாரர்கள் 115 பேர் கருணை அடிப்படையிலான பணிக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். குறிப்பாக, தகவல் பதிவு உதவியாளர் மற்றும் காவல் நிலைய வரவேற்பாளர் பணியிடங்களுக்கு அவர்கள் நியமிக்கப்பட்டனர். 115 பேருக்கும் பணி நியமன உத்தரவுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை வழங்கினார்.

இந்நிகழ்வில், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் தீரஜ் குமார், டிஜிபி சங்கர் ஜிவால் உள்பட பலர் பங்கேற்றனர். திமுக தலைமையிலான அரசு பொறுப்பேற்ற முதல் இதுவரை காவல் துறையில் மட்டும் 17,436 பேருக்கு பணிநியமன உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இன்றும் நாளையும் வெப்பம் அதிகரிக்கும்

சென்னை, மே 21: தமிழகத்தில் கடந்த சில நாள்களாக பரவலாக பெய்த மழையால், வெப்பத்தின் தாக்கம் குறைந்துவந்த நிலையில், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் (மே 22,23) அதிகபட்ச வெப்பநிலை மீண்டும் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் புதன்கிழமை பகல்நேரத்தில் அதிகபட்சமாக தொண்டியில் 101.45 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது. மேலும், தூத்துக்குடி - 100.76, மதுரை விமான நிலையம், பாளையங்கோட்டை - தலா 100 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது. தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் மே 22, 23-இல் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 3 டிகிரி செல்சியல் அதிகமாக இருக்கும்.

மிதமான மழை: ஆந்திர கடலோரப் பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, வியாழக்கிழமை (மே 22) முதல் மே 27-ஆம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

சென்னைக்கு மழை: சென்னையில் புதன்கிழமை காலை வரை அதிகபட்சமாக விம்கோ நகர் மற்றும் மணலியில் தலா 60 மி.மீ. மழை பதிவானது. அதேபோல், புழல், எண்ணூர், திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் தலா 50 மி.மீ., கொளத்தூரில் 40 மி.மீ., மேலும் பல்வேறு பகுதிகளில் குறிப்பிட்ட அளவு மழை பதிவானது. அதைத் தொடர்ந்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மே 22-இல் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

ஆற்காடில் 150 மி.மீ.: தமிழகத்தில் புதன்கிழமை காலை வரை அதிகபட்சமாக ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடில் 150 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மேலும், அரக்கோணம் (ராணிப்பேட்டை) - 120 மி.மீ., கீழ்பென்னாத்தூர், வெம்பாக்கம் (திருவண்ணாமலை), பாலாறு அணைக்கட்டு (ராணிப்பேட்டை), திருத்தணி (திருவள்ளூர்) - தலா 100 மி.மீ. மழை பதிவானது.

புயல் சின்னம்: வட கர்நாடக மற்றும் கோவா கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள மத்திய கிழக்கு அரபிக் கடலில் புதன்கிழமை காலை வளிமண்டல மேல்டுக்கு சுழற்சி நிலவியது. இந்த சுழற்சி அன்று இரவு அதே பகுதியில் காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக (புயல் சின்னம்) வலுப்பெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து அந்த புயல் சின்னம் வடக்கு திசையில் நகர்ந்து, மே 23-ஆம் தேதி வாக்கில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு நேரம்: 5 பேர் கொண்ட குழு முடிவெடுக்க உத்தரவு

மதுரை, மே 21: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு நேரம் தொடர்பான வழக்கில், சபரிமலை ஐயப்பன் கோயில் மேல்சாந்தி உள்ளிட்ட 5 பேர் கொண்ட குழுவினர் முடிவெடுக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு புதன்கிழமை உத்தரவிட்டது.

திருச்செந்தூரைச் சேர்ந்த வீரபாகு மூர்த்தி சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த பொதுநல மனு:

திருச்செந்தூர் சுப்பிரணிய சுவாமி கோயிலில் வருகிற ஜூலை 7-ஆம் தேதி காலை 9 - 10.30 மணிக்குள் குடமுழுக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. குடமுழுக்கு நடைபெற குறிக்கப்பட்டுள்ள நேரமானது வேதங்கள், சாஸ்திரங்கள், கோயிலில் பின்பற்றப்படும் ஆகம விதிகளின்படி சரியானதாக இல்லை.

மேலும், திருச்செந்தூர் கோயிலில் நடைபெறவிருக்கும் குடமுழுக்கை ஆகம விதிகளின்படி நண்பகல் 12.05 - 12.45 மணிக்குள் நடத்துமாறு அதிகாரிகளிடம் வலியுறுத்தினேன். வெயில் சுட்டெரிக்கும் என்பதால், இந்த நேரத்தில் குடமுழுக்கு நடத்த முடியாது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே, திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கை வருகிற ஜூலை 7 -ஆம் தேதி நண்பகல் 12.05-12.45 மணிக்குள் நடத்துவதற்கு கோயில் நிர்வாகத்தினருக்கு உத்தரவிட வேண்டும் என அவர் கோரியிருந்தார்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி, சிவராம சுப்பிரமணிய சாஸ்திரி என்பவரும் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுக்கள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ். ஸ்ரீமதி, ஆர். விஜயகுமார் அமர்வு முன் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசுத் தரப்பில், திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு நடத்துவதற்காக 3 நேரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவை இன்னும் முடிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

இந்த வழக்கில் சபரிமலை ஐயப்பன் கோயில் மேல் சாந்தி, திருச்செந்தூர் கோயில் ஸ்தானிகர்கள், பிள்ளையார்பட்டி பிச்சை குருக்கள், திருப்பரங்குன்றம் கோயில் ராஜா குருக்கள், மனுதாரர் சிவராம சுப்பிரமணிய சாஸ்திரி ஆகியோர் கொண்ட 5 பேர் குழுவினர் உரிய ஆலோசனை நடத்தி, குடமுழுக்கு நடத்துவதற்கான நேரத்தை முடிவு செய்ய வேண்டும். இந்த வழக்கு முடித்து வைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

டாஸ்மாக் முறைகேடு வழக்கு: பொது மேலாளரிடம் விசாரணை

சென்னை, மே 21: டாஸ்மாக் நிறுவனத்தின் ரூ.1,000 கோடி முறைகேடு வழக்கு தொடர்பாக, அந்த நிறுவனத்தின் பொது மேலாளரிடம் அமலாக்கத் துறையினர் புதன்கிழமை மூன்று மணி நேரம் விசாரணை செய்தனர்.

டாஸ்மாக் நிறுவனத்தில் கடந்த மார்ச் மாதம் அமலாக்கத் துறை சோதனை நடத்தி ரூ.1,000 கோடி முறைகேடு நிகழ்ந்திருப்பதாக தெரிவித்தது.

மேலும், இது தொடர்பாக பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிந்து தீவிர விசாரணை செய்கிறது. இதன் ஒரு பகுதியாக டாஸ்மாக் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் விசாகன், திரைப்பட தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன் வீடு, தொழிலதிபர் ரத்தீஷ் வீடு உள்பட 10 இடங்களில் கடந்த வாரம் இரு நாள்கள் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தினர்.

அந்தச் சோதனையில் பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதன் அடிப்படையில் விசாரணைக்கு ஆஜராகுமாறு டாஸ்மாக் நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவு பொது மேலாளர் சங்கீதா, துணைப் பொது மேலாளர் ஜோதி சங்கர் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன்படி, நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்தில் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பொது மேலாளர் சங்கீதா ஆஜரானார்.

முன்னதாக, டாஸ்மாக் நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் ஜோதி சங்கர், காலை 10.30 மணியளவில் விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் அமலாக்கத் துறை அதிகாரிகள் 6 மணி நேரம் விசாரணை மேற்கொண்டனர். ஜோதி சங்கரிடம் இது வரை ஒன்பது முறை விசாரணை நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ பெரும்புதூர் ராஜீவ் காந்தி நினைவிடத்தில் காங்கிரஸ் கட்சியினர் அஞ்சலி

ஸ்ரீபெரும்புதூர், மே 21: முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 34-ஆவது நினைவு நாளையொட்டி ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வபெருந்தகை தலைமையில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1991-ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரம் செய்ய வந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி ஸ்ரீ பெரும்புதூரில் தற்கொலை படை தாக்குதலில் உயிரிழந்தார். இதையடுத்து அவருக்கு நினைவிடம் கட்டப்பட்டுள்ளது.

அங்கு புதன்கிழமை நடைபெற்ற நினைவு நாள் நிகழ்வில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வபெருந்தகை தலைமையில் பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி எடுத்து கொண்டனர்.

தொடர்ந்து மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.

அரக்கோணம் பாலியல் விவகாரம்: தேசிய மகளிர் ஆணையம் வலியுறுத்தல்

புது தில்லி, மே 21: அரக்கோணம் திமுக இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் தெய்வச்செயல் மீதான பாலியல் குற்றச்சாட்டுகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க தமிழக காவல் துறைக்கு தேசிய மகளிர் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக தேசிய மகளிர் ஆணையத் தலைவி விஜயா ரஹத்கர் தமிழக காவல் துறை டிஜிபி-க்கு எழுதியுள்ள கடிதத்தில், 'பல பெண்களைத் திருமணம் செய்து அவர்களை சக அரசியல்வாதிகளின் இச்சைக்காக அந்த நபர் பயன்படுத்தி வந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவரின் மனைவியே இக்குற்றச்சாட்டைக் கூறியுள்ளார். இது பெண்களுக்கு எதிரான மோசமான குற்றச் செயல்.

எனவே, சம்பந்தப்பட்ட நபர் மீது உடனடியாக சட்டப்படி வழக்குகளைப் பதிவு செய்து முறையாக விசாரணை நடத்த வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார்.

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிட்டெட்

பதிவு அலுவலகம் : இந்தியன் ரேயான் காம்பவுண்டு, வெரவல், குஜராத் - 362 266.
கிளை அலுவலகம் : 2வது தளம், பில்டிங் எண்.739, நிஸ்ஸான் மோடரும் மேல் தளம், அவினாசி சாலை, கோயமுத்தூர் - 641018

"பிற்சேர்க்கை-IV-A" (பார்க்க விதி 8(6)-க்கான விதி விலக்கு)
அசையா சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

நிறுவனங்களுக்கான தேசிய சட்ட தீர்ப்பாயம் - அகமதாபாத்தில் 24.03.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் முறையாக பதிவு செய்யப்பட்ட 11.03.2024 தேதிய இணைவு திட்டத்தின் வாயிலாக, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிட் மற்றும் ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிட் ஆகியவற்றுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட இணைவின் படி, இதன் கீழ்க்கண்ட வெட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள அடமான சொத்து தொடர்பாக, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிட் - ஆல் எடுக்கப்பட்ட அனைத்து சர்போசி சட்ட நடவடிக்கைகளும் நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 230 & 232-ன் படி இணைக்கப்பட்ட நிறுவனமான ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிட் - க்கு மாற்றாகி உள்ளது. அதனால், இந்த அறிவிப்பும் ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிட்டெட் - ஆல் வழங்கப்படுகிறது (இனிமேல்கொண்டு ABCL என்றே அழைக்கப்படும்).
பிணைக்கப்பட்ட நிதிசொத்து மறுநிலைப்படுத்தல், பிணைசொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் '2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) மற்றும் 9(1)-க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், அமரவர் கடனுக்கான நிலுவைகளுக்கான ஜாமீனாக, ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிட்டெட்-ன் (தற்போது ABCL உடன் இணைக்கப்பட்டுள்ளது) அதிகாரப்பூர்வ அலுவலரால், 24.02.2025 அன்று கலந்தோய் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், கடன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்களான M/s. ஸ்ரீனிவாசா கார்பெட் பிரைவேட் லிமிட்டெட் (SGPL), திரு. B ஸ்ரீராமுலு மற்றும் திருமதி. R ஜீவன் லதா ஆகியோரிடமிருந்து ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு 28.02.2025-ம் தேதியின்படி வர வேண்டிய நிலுவைத்தொகை ரூ.17,00,00,208.60/- (குபாய் பதினேழு கோடியே இருநூற்று எட்டு மற்றும் பைசா அறுபது மட்டும்) மற்றும் பணமாக்கப்படும் வரை வரும் பொருத்தத்தக்க விகிதம் அன்றாடம் சேர்ந்து வரும் வட்டி மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை வசூலிப்பதற்காக 'இருக்கின்ற இடத்தில்' மற்றும் 'இருக்கின்ற நிலையில்' மற்றும் 'இருக்கின்றவாறு உள்' என்ற அடிப்படையில் 2025 ஜூன் 17-ம் தேதியன்று விற்பனை செய்யப்படும்.
அடிப்படை விலை, டேவணித்தொகை ஆகியன கீழ்க்கண்டவாறு :

அசையா சொத்துக்களின் விபரம்	அடிப்படை விலை	டேவணித்தொகை (10%)
அசையா சொத்து (கிரைய ஆவண எண். 2429/1995, கிரைய ஆவண எண். 2430/1995 & கிரைய ஆவண எண். 2725/2015-ன் படி திரு. B. ஸ்ரீராமுலு என்பவருக்கு சொந்தமானது) கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பீளமேடு சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, எண். 53, சௌரிபாளையம் கிராமம், ராஜன் நகரில் சர்வே எண்கள். 101/1-ல் அமையப்பெற்ற ஏக்கர் 2.93 மற்றும் 100/1-ல் அமையப்பெற்ற ஏக்கர் 0.11 என மொத்தம் 3.04 ஏக்கர் பரப்பில் உள்ள சொத்து	ரூ- 30,21,58,950/-	ரூ- 3,02,15,895/-

இனம் A - கிரைய ஆவண எண். 2429/1995-ன் படி.
கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பீளமேடு சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, எண். 53, சௌரிபாளையம் கிராமம்:

சர்வே எண்	பரப்பு ஏக் - சென்ட்	தரம் ரூ. பை.	பகுப்பு
101/1	2.93	4.95	புஞ்சை / தோட்டம்
100/1	0.11	0.30	புஞ்சை / தோட்டம்

இதில் இந்நுடன் இணைக்கப்பட்ட வரைபடத்தின் படி, தெற்கு புறம் உள்ள 1.00 ஏக்கர். எல்லைகளாவன : மேற்கு - சர்வே எண். 102/1-ல் G ருக்மணியம்மாள் & பிறரின் இதர இடங்கள், கிழக்கு - தென்வடல் சௌரிபாளையம் சாலை, தெற்கு - விற்பவரின் மீதி இடங்கள், வடக்கு - கஜினி மில்ஸ் இடங்கள்;

இனம் B - கிரைய ஆவண எண். 2430/1995-ன் படி
கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பீளமேடு சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, எண். 53, சௌரிபாளையம் கிராமம் :

சர்வே எண்	பரப்பு ஏக் - சென்ட்	தரம் ரூ. பை.	பகுப்பு
101/1	2.93	4.95	புஞ்சை / தோட்டம்
100/1	0.11	0.30	புஞ்சை / தோட்டம்

இதில் இந்நுடன் இணைக்கப்பட்ட வரைபடத்தின் படி, உள்ள 0.51-1/2 ஏக்கர். எல்லைகளாவன : மேற்கு - திருமதி. G ருக்மணியம்மாள் & பிறரின் இதர இடங்கள், கிழக்கு - விற்பவரின் இடம், தெற்கு - திரு. B ஸ்ரீஹரி இடம், வடக்கு - வாய்க்குபவரின் இடம்,

இனம் C - கிரைய ஆவண எண். 2725/2015-ன் படி
கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பீளமேடு சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, எண். 53, சௌரிபாளையம் கிராமம் :

சர்வே எண்	பரப்பு ஏக் - சென்ட்	தரம் ரூ. பை.	பகுப்பு
101/1	2.93	4.95	புஞ்சை / தோட்டம்
100/1	0.11	0.30	புஞ்சை / தோட்டம்

இதில் உள்ள 1 சென்ட், எல்லைகளாவன : மேற்கு - திருமதி. G ருக்மணியம்மாள் & பிறரின் இதர இடங்கள், கிழக்கு - விற்பவரின் இடம், தெற்கு - திரு B ஸ்ரீஹரி இடம், வடக்கு - வாய்க்குபவரின் இடம்,
மொத்தம் 1.52-1/2 ஏக்கர் இடம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவு கூர்ந்து ஜாமீன் பெற்று கடனளித்தவரின் வலைதளம் https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-sarfaesi-Act.aspx மற்றும் வலைதளம் https://sarfaesi.auctiontiger.net-ஐ பார்வையிடவும்.

தேதி : 22.05.2025
இடம் : கோயமுத்தூர்
LAN : 80000533, 80001001, 80002237, 80002243 & 80003789

ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிட்டெட் - க்காக
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
(97109 17596, 88282 04208)

தினமணி மற்றும் நெய்வேலி புத்தகக் கண்காட்சி 2025
இணைந்து நடத்தும்
குறும்படப் போட்டி

என்எல்சி இந்தியா நிறுவனத்தின் ஆதரவில் 24-ஆம் ஆண்டாக 04–07–2025 முதல் 14–07–2025 வரை நடைபெறவுள்ள புத்தகக் கண்காட்சியை ஒட்டி நெய்வேலி புத்தகக் கண்காட்சி குழுவும், தினமணி நாளிதழும் இணைந்து நடத்தும் குறும்பட போட்டிக்கான குறும்படங்கள் (Short Films), கீழ்க்காணும் விதிகளுக்கு உட்பட்டு வரவேற்கப்படுகின்றன.

- குறும்படங்கள் (Short films) தமிழின் பண்பாட்டு மேன்மை, சமுதாய சிக்கல்கள், சமூக உணர்வுகள் போன்றவற்றை பிரதிபலிப்பவையாக இருத்தல் வேண்டும்.
- அரசியல், ஜாதி, மதம், மொழி போன்றவற்றின் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் இருத்தல் வேண்டும்.
- குறும்படங்கள் 18 மணித்துளிகளுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- குறும்படங்கள் (Pen Drive) ல் தரமாக (Standard Format), பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.
- இயக்குநர், நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த விவரமும் ஏற்கெனவே பரிசு பெற்றிருந்தால் அது பற்றிய விவரமும் இணைந்து அனுப்பப்படுதல் வேண்டும்.
- குறும்படத்தின் கதை சுருக்கம், முக்கிய காட்சிகளின் ஒளிப்படங்கள் (still photos) மற்றும் இயக்குநரின் ஒளிப்படம் வரவேற்கப்படுகின்றன.
- போட்டியில் கலந்து கொள்வதற்கான ஒப்புதல் கடிதம் படத்தின் உரிமையாளர் / தயாரிப்பாளர் இருந்து பெறப்பட்டு இணைக்கப்படுதல் வேண்டும். இயக்குநரின் பெயர் மற்றும் முகவரி, தொலைபேசி, அலைபேசி எண் கண்டிப்பாக இடம் பெற்றிருத்தல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்படும் குறும்படங்கள் நெய்வேலி புத்தகக் கண்காட்சி 2025 –இல் திரையிடப்படும்.
- குறும்படங்கள் 01–07–2024 -க்கு பிறகு எடுக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.
- போட்டி முடிவு தொடர்பாக நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. போட்டி தொடர்பாக கடிதப் போக்குவரத்துக்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.
- போட்டி முடிவுகள் ஜூன் 2025 நான்காவது வாரம் வெளியிடப்படும்.
- ஆவணப்படங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- தேர்வு செய்யப்படாத குறும்படங்களை திருப்பி அனுப்புதல் இயலாது.
- தேர்வு செய்யப்படும் குறும்படங்களுக்கு பரிசுகள் நெய்வேலி புத்தகக் கண்காட்சி 2025 -இல் வழங்கப்படும்
- போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து படைப்பாளிகளுக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- போட்டியில் பங்கு பெறும் நெய்வேலி படைப்பாளிகள் அனைவருக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்படும்.
- போட்டிக்கு குறும்படங்கள் வந்து சேர வேண்டிய **கடைசி தேதி ஜூன் 20, 2025.**
- கடைசி தேதிக்குப் பின்னர் பெறப்படும் குறும்படங்கள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதல் பரிசு ரூ. 25,000
இரண்டாம் பரிசு ரூ. 20,000
மூன்றாம் பரிசு ரூ. 15,000

6 சிறப்பு பரிசுகள் (தலா ரூ.3,000)
(1) நடிப்பு–ஆண் (2) நடிப்பு–பெண் (3) கதைக்கரு (4) படத்தொகுப்பு (5) ஒளிப்பதிவு (6) இயக்கம்.

நடுவர் குழுவின் சிறப்பு பரிசுகள் (தலா ரூ.1,500)
5 குறும்படங்கள் மற்றும் சிறந்த குழந்தை நட்சத்திரம்.

குறும்படங்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
செயலாளர்/நெய்வேலி புத்தகக் கண்காட்சி 2025
செயல் இயக்குநர்/ (Legal, CSR, Medical) தலைமை அலுவலகம் (Room No G-24)
என்எல்சி இந்தியா நிறுவனம், வட்டம்-I, நெய்வேலி - 607801.

DINAMANI, Coimbatore Phone: 2317853; Fax: 0422-2311320 RNI Reg. No. 53675/91. Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Ltd., at Express Press, Old No.152 / New No.110, Pankaja Mill Road, Coimbatore - 641 045. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Coimbatore. Vol. 36, No. 141
COPYRIGHT: Express Publications (Madurai) Private Ltd., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.